# முதல் திருப்புதல் தேர்வு – 2024

**10** - ஆம் வகுப்பு

## தமிழ்

காலம் : 3.15 மணி மதிப்பெண்கள் : 100

பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 1x15=15

1) பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள்கள் எது?

அ) குலா ஆ) சீலா இ) துலா ஈ) இலா

2) கோசலை நாட்டின் கொடை இல்லாத காரணம் என்ன?

அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்

இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்

3) சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மருவூர்பாக்கம் அமைந்துள்ள நகரம்?

அ) மதுரை ஆ) புகார் இ) வஞ்சி ஈ) முசிறி

4) அருளைப் பெருக்கி அறிவை திருத்தி மருளை அகற்றி மதிக்கும் தெருளை" - என்று இவ்வடியில் குறிப்பிடப்படுவது எது?

அ) தமிழ் ஆ) அறிவியல் இ) இறைவன் ஈ) கல்வி

5) "<u>காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்</u> நிலத்துக்கு நல்ல உரங்கள்" இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதியில் குறிப்பிடப்படுவது எது?

அ) இலையும் சருகும் ஆ) சோகையும் சண்டும்

இ) சருகும் சண்டும் ஈ) தாளும் ஓலையும்

6) <u>பெரிய மீசை சிரித்தார்</u> அடிக்கோடிட்ட சொல்லுக்கு தொகையின் வகை எழுதுக

அ) பண்புத்தொகை ஆ) அன்மொழித்தொகை

இ) உம்மைத்தொகை ஈ) உவமைத்தொகை

7) மலர்கள் தரையில் நழுவும் எப்போது?

அ) அல்லி முகர்ந்தால் ஆ) இறுக்கி முடிச்சிட்டால்

இ) தளர பிணைத்தால் ஈ) காம்பு முறிந்தால்

8) விரிச்சி என்ற சொல்லின் பொருள்--

அ) விரித்தல் ஆ) மலர் இ) நற்சொல் ஈ) தொழுதல்

9) மேன்மை தரும் அறம் என்பது.

அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது

ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது

இ) புகழ் கருதி அறம் செய்வது

ஈ) பதில் உதவி பெறுவதற்காக அறம் செய்வது



Scanned with OKEN Scanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net

10) தீவகம் என்ற சொல்லுக்கு பொருள் யாது?

அ) விளக்கு ஆ) துன்பம் இ) பகை ஈ) நன்மை

11) சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்கவும்.

அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு.

இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு ( 12, 13, 14, 15 ) விடை தருக.

*"வாளால் அறுத்துச்சுடினும் மருத்துவன்பால்*
*மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்*
*மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா நீ*
*ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.*

12) இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?

அ) நற்றிணை ஆ) சிலப்பதிகாரம் இ) புறநானூறு ஈ) பெருமாள் திருமொழி

13) இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) குலசேகராழ்வார் ஆ) ஔவையார் இ) நல்வேட்டனார் ஈ) இளங்கோவடிகள்

14) மாளாத இத்தொடரின் பொருள் யாது?

அ) தீராத ஆ) விளையாட்டு இ) சுட்டாலும் ஈ) புண்

15) பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகை சொற்களை குறிப்பிடுக.

அ) வாளால் அறுத்து ஆ) மாறாத மாயத்தால்

இ) வாளால் மாளாத ஈ) ஆளா அடியேனே.

## பகுதி-II (மதிப்பெண்கள் - 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும்.**

**21-வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.** [4 x 2 =8]

16) **விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.**

அ) இளங்கோ தந்த சிலப்பதிகாரம் தமிழகத்தின் பொதுச்சொத்து ஆகும்.

ஆ) தமிழர் உலகமே பரிசாக கிடைத்தாலும் பழித்தரும் செயலை செய்ய மறுத்தனர்.

17) "வேங்கை" என்பதை தொடர் மொழியாகவும் பொது மொழியாகவும் வேறுபடுத்துக.

18) வசன கவிதை குறிப்பு வரைக.

19) செய்குதம்பி பாவலரின் கல்விப் பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.

20) மெய்க்கீர்த்தி பாடுவதன் நோக்கம் யாது?

21) 'முயற்சி' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.



www.TrbTnpsc.com

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும்.** 5x2 = 10

22) கலைச்சொல் தருக. 1) Myth 2) Emblem

23) மொழி எத்தனை வகைப்படும்? அவை யாவை?

24) பொறித்த... பகுபத உறுப்பிலக்கணம் தருக.

25) பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

26) பழமொழி நிறைவு செய்க. அ அளவுக்கு ஆ. உப்பில்லா

27) ஆசிரியப்பாவின் வேறு பெயர் யாது? ஆசிரியப்பாவின் ஓசை யாது ?

28) இரு சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக. தொடு — தோடு

## பகுதி-III (மதிப்பெண்கள் 18)

### பிரிவு-1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க.** 2x3=6

29) ஹிப்பாலஸ் பருவக்காற்று பற்றி எழுதுக.

30) தமிழ் அன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

31) **உரைநடைப் பத்தியை படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

வாய்மையே சிறந்த அறமாக சங்க இலக்கியங்கள் பேசப்படுகின்றன. வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்று கருத்தை இலக்கியங்கள் கூறுகின்றன. நாக்கு ஒரு அதிசய திறவுகோல் என்பார்கள். நாக்கு தான் இன்பத்தின் கதவை திறப்பதும் துன்பத்தின் கதவை திறப்பதுவும் ஆகும். மெய் பேசும் நா மனிதனை உயர்த்துகிறது. பொய் பேசும் நா மனிதனை தாழ்த்துகிறது.

1) எதை சிறந்த அறமாக சங்க இலக்கியம் பேசுகிறது? 2) நா என்பதன் பொருள் யாது?

3) மனிதனை நா எப்பொழுது தாழ்த்துகிறது?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.**

**34-ஆவது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.** 2x3=6

32) சித்தாளின் மனச்சுமைகள் செங்கற்கள் அறியாது இடம் சுட்டிப் பொருள் தருக.

33) வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

34) அடிப் பிறழாமல் எழுதுக. "அருளை பெருக்கி" எனத் தொடங்கும் நீதி வெண்பா பாடல்

*(அல்லது)* "நவமணி வடக்க யில்போல்" எனத் தொடங்கும் தேம்பாவணி பாடல் எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2x3=6

35) சோலைக்(பூங்கா) காற்றும், மின்விசிறி காற்றும் பேசிக் கொள்வதை போல் ஓர் உரையாடல் அமைக்க.

36) தற்குறிப்பேற்ற அணியை விளக்குக.

37) அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்

பேணித் தமராக் கொளல் - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு எழுதுக.



Scanned with OKEN Scanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

## பகுதி - IV (மதிப்பெண்கள்:25)

**அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்கவும்.**

38) அ) காசி காண்டம் குறிப்பிடும் இல்லற ஒழுக்கங்களில் எவையேனும் ஐந்தினை எழுதுக.

*(அல்லது)*

ஆ) "ஒழுக்கமுடைமை" என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்தைத் தொகுத்து எழுதுக.

39) அ) நிகழ்கலை ஐந்து எழுதி விளக்குக. *(அல்லது)*

ஆ) தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.

40) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



41) மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பப் படிவம் நிறைவு செய்க. பெயர்: குணசேகரன், பிறந்த தேதி: 05.06.2008, தந்தை பெயர்: ராஜாமணி, புதுதெரு, தஞ்சாவூர், அவன் பெற்ற மதிப்பெண் 458/500. தேர்வாளர் தன்னை குணசேகரன் ஆக கருதி கொடுக்கப்பட்ட படிவத்தில் பூர்த்தி செய்க.

42) அ) பள்ளியிலும், வீட்டிலும் நீங்கள் நடந்து கொள்ளும் முறையினை பட்டியலிடுக.

*(அல்லது)* ஆ) மொழி பெயர்க்க.

The golden sun gets up early on the morning and starts its bright rays to fade away the dark.The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion.The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything present.

## பகுதி - V (மதிப்பெண் - 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** 3X8=24

43) அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக. *(அல்லது)*

ஆ) நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக.

44) அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை 'கோபல்லபுரத்து' மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

*(அல்லது)* ஆ) இராமானுஜர் நாடகத்தின் மூலம் அறியலாகும் செய்திகள் யாவை?

45) அ) சான்றோர் வளர்த்த தமிழ் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக. *(அல்லது)*

ஆ) "விசும்பின் துளியும் பசும்பொன் தலையும்" என்னும் கருத்தை கொண்டு, குறிப்புகளைப் பயன்படுத்தி கட்டுரை ஒன்று குறிப்புகள்: முன்னுரை- இயற்கையோடு இயைந்து வாழ்வோம்- மரம் வளர்ப்போம் மழை பெறுவோம் - மழை நீரை சேமிப்போம்- முடிவுரை.



Scanned with OKEN Scanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com